[திரு. என். வி. நடராசன்] [1973 பிப்ரவரி 9

இந்த நிலையில் ஒரு முடிவு காண நிர்வாகத்தினர் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர்.

சென்னை 2–வது சரகத் தொழிலாளர் துறை அலுவலர் பேச்சு வார்த்தை நடத்தியதில் பயனளிக்கவில்லையாதலால் சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையர் மேற்கொண்டு பேச்சு வார்த்தை நடத்துவார்.

இந்த சமத்தில் நான் மற்றொன்றையும் கூற விரும்புகிறேன். நமது மாநிலத்தில், கழக அரசு ஏற்பட்ட உடனேயே, தொழிலாளர் களின் வேலை நிறுத்தப் பிரச்னை, அல்லது அவர்களின் மற்ற பிரச்னைகள் எதுவாக இருந்தாலும் அவைகளை உடனடியாகத் தீர்த்து வைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்திருக்கிறது. ஆனால், நாட்டிலுள்ள சில தொழிற்சங்கத் தலைவர்கள் இங்கே நிலவுகின்ற அமைதியைக் குலைக்க வேண்டுமென்பதற்காக, ஒரு பிரச்னையை இனிதே தீர்ந்தது என்று எண்ணி உட்காருகிற நேரத்தில் கதவைத் தட்டி இதோ நான் இருக்கிறேன் என்று சொல்வது போல்—தொழிலாளர்கள் மத்தியில் அடிக்கடி வேலை நிறுத்தம் போன்றவற்றைத் தூண்டிவிடுகிறார்கள். இதைத் தொழிலாள நண்பர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த வேலை நிறுத்தம் போன்றவற்றால் அவர்களுக்கு மட்டும் நஷ்டம் ஏற்படவில்லை, சமுதாயத்திற்கும் நஷ்டம், நாட்டின் வளர்ச்சிக்கும் தடை ஏற்படுகிறது. எனவே அப்படிப்பட்ட தலைவர்கள் வலையில் தொழிலாளர்கள் சிக்காமல் இருக்கவேண்டுமென்று எடுத்துக் கூறி இந்தப் பிரச்னை குறித்து அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள தால், இந்தச் சபையை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவை யில்லை என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளககத்திற்குப் பிறகு, இது குறித்து விவாதிக்க இந்தச் சபையை ஒத்திவைக்கத் தேவையில்லை, ஆகவே இத்தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்பு.

MR. DEPUTY SPEAKER: Under Rule 41 of the Assembly Rules, the Honourable Member, Thiru N. Dennis, will call the attention of the Honourable Minister for Education and Local Administration to an urgent matter of public importance..........

5. நடை முறைக் கேள்விகள்.

(அ) ஒற்றிவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளாததுகுறித்து,

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a point of order I gave notice of an adjournment motion under rule 42 of the Assembly Rules re.........

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அது குறித்து நீங்கள் என் சேம்பரில் வந்துகேட்க வேண்டும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, there should not any

* * * *

THIRU N. GANAPATHY: Sir, that is a reflection on the Chair and we cannot tolerate it.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.